# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.108/2024**

Deposition of Witness of PW9

| | | | |
|---|---|---|---|
| Name | : தெய்வராணி | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 17th மார்ச் 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது பொள்ளாச்சி நகர காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.01.2022 ம் தேதி நான் நகர காவல் நிலைய பொறுப்பு காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது மொடக்குறிச்சி காவல்நிலைய குற்ற எண்.28/2022 சட்ட பிரிவுகள் 279, 337, 304(A) (2எண்ணிக்கை) இதச ன் கீழான முதல் தகவல் அறிக்கையை உதவி ஆய்வாளர் ஜான்சன்பால் பதிவு செய்து புலன் விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்த வழக்கு கோப்பினை நான் பெற்றுக்கொண்டு 25.01.2022ம் தேதி காலை 6.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விநாயக், பழனிசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்பு அன்றைய தினம் காலை 9.00 மணி முதல் 11.30 மணி வரை ஈரோடு அரசு மருத்துவ மனை சென்று இறந்துபோன கார்த்திக்பிரபு என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகளின் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தும், பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு இறந்த போன கார்த்திக்பிரபு இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு வேண்டுகோள் கடிதத்தின் மூலம் நிலைய தலைமை காவலர் 311 இம்தியாஸ் வசம் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தேன். சாட்சிகள்

ஜெகதீஸ், சந்திரசேகரன்,ராமு, லட்சுமி, பாலமுருகன், அழகர்சாமி, முத்துப்பாண்டி, ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்பு தொடர்புலன் விசாரணைக்காக பின்னர் மொடக்குறிச்சி காவல் ஆய்வாளராக பணி பொறுப்பேற்ற காவல் ஆய்வாளர் தீபா அவர்களிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன்.

<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை ஒருவழி சாலையா என்றால் இல்லை. விபத்து நடந்த இடத்தில் இருந்து காவல்நிலையம் 100 மீட்டர் தொலைவில் உள்ளதா என்றால் இல்லை, 4 கிலோமீட்டர் தொலைவில் வடபுறமாக உள்ளது. விபத்து நடந்த இடத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவில் CCTV கேமரா ரோட்டின் ஓரமாக இருந்தது என்றால் அதுபற்றி எனது விசாரணையில் தெரியவில்லை. நான் சொன்னபடி சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**